செ.வெ.எண் 11 நாள்: 07.09.2020

பெரம்பலூர் மாவட்டம்

# டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது வழங்கும் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது வழங்கும் விழா பாரத சாரண,சாரணியர் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (07.09.2020) நடைபெற்றது.

**இந்த விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் பேசியதாவது:**

மாதா, பிதா, தெய்வம் இவர்களுக்கு இணையாக குருவினை வைத்து போற்றும் பாரம்பரியம் மற்றும் பண்பாட்டினைக் கொண்டது நமது சமுதாயம். ஒரு நாட்டின் எதிர்காலம் வளர்ச்சி என்பதை இந்த நாட்டின் வகுப்பறையில்தான் உருவாக்கப்படுகிறது. நமது நாடு உலகளவில் அதிக கல்வியறிவு பெற்ற இளைஞர்களைக் கொண்ட நாடாக திகழ்வதற்கு, மூலகாரணமாக அமைந்த, தன்னலமற்ற தியாக உள்ளத்தோடு பணியாற்றும் ஆசிரியர்களுக்கே இப்பெருமை சேரும். ஒரு மாணவனின் தனித்திறன்களை அடையாளம் கண்டு, அதனை அவருக்கு அடையாளம் காட்டி அவர் மூலம் சமுதாயத்தை மேம்படுத்திடச் செய்வதும், ஒரு மாணவனுக்குத் தேவையான ஆற்றல், ஊக்கம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி என அனைத்தையும் கற்றுக்கொடுத்து, நல்லவராக, பண்புள்ளவராக, ஒழுக்கம் உள்ளவராக, நல்ல சிந்தனை உடையவராக, கண்ணியம் உள்ளவராக, சிறந்தவராக, அறிஞராக, மேதையாக, தலைசிறந்த மாணவனாக உயர்த்தும் உன்னத பணியே ஆசிரியர் பணி என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். வாழ்க்கை எனும் பாடத்தைக் கற்றுத் தந்து மாணவர்களுக்கு உண்மையான வழிகாட்டியாக விளங்கி ஒவ்வொரு மாணவர்களையும் சிறந்த மனிதர்களாக்குவது ஆசிரியர்கள்தான். குழந்தைகள் எந்தவொரு சூழ்நிலையிலிருந்து கல்வி கற்க வந்தாலும் அவர்களுக்கு நல்ல ஒரு படிகட்டாக ஆசிரியர்கள் திகழ வேண்டும்.

தமது இறுதி காலம் வரை ஒரு நல்ல ஆசிரியராக வாழ்ந்து காட்டி, மாபெரும் தத்துவ மேதையாக விளங்கிய சர்வபள்ளி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 5ஆம் நாளை ஆசிரியர் தினமாக இந்தியா முழுவதும் கொண்டாடுகிறோம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழக அரசு ஆசிரியர் பணியினை சீரோடும், சிறப்போடும், அற்பணிப்பு உணர்வோடும் செயல்படும் ஆசிரியர்களை சிறப்பிக்கும் வகையில், தமிழகத்தில் சர்வபள்ளி எனும் சிற்றூரில் பிறந்து, ஆசிரியராக தனது பணியினை துவக்கி, இந்தியாவின் முதற்குடிமகனாக உயர்ந்த முன்னாள் குடியரசு தலைவர் சர்வபள்ளி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களின் பெயரில் ஒவ்வொரு ஆண்டும் விருதினை தமிழக அரசு வழங்கி வருகிறது.

அதனடிப்படையில் இந்த ஆண்டிற்கான டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது பெற, நமது மாவட்டத்தில் 9 ஆசிரியர்கள் சிறந்த ஆசிரியர்களாக தேர்வு செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், இன்று விருதும், ரூ.10,000/-ம் தொகைக்கான காசோலையும் வழங்கப்படுகிறது. மேலும், ஆசிரியர் பணியினை சிறப்பிக்கும் வகையில் சிறந்த முறையில் கணினியை பயன்படுத்தி, மாணவர்களுக்கு பயிற்றுவித்தல், கல்வி இணைச் செயல்பாடுகளில் சிறந்து விளங்குதல், குழந்தைகள் சேர்க்கை மற்றும் பள்ளி மேலாண்மையில் சிறந்து விளங்கும் ஆசிரியர்களுக்கு “கனவு ஆசிரியர்” என்ற சிறப்புமிக்க விருதுகளை ஒவ்வொரு ஆண்டும் வழங்கி கௌரவித்து வருகிறது. மாணவச் செல்வங்களுக்கு அழியாச் செல்வமான கல்விச் செல்வத்தினை வழங்குவதில் சிறப்பாக செயல்பட்ட ஆசிரியர்களுக்கான விருதினை பெறும் ஆசிரியப் பெருமக்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்(பெரம்பலூர்) இளம்பை இரா.தமிழ்ச்செல்வன், முதன்மை கல்வி அலுவலர் க.மதிவாணன், மாவட்ட கல்வி அலுவலர்கள் அ.மாரி மீனாள் (பெரம்பலூர்), அ.குழந்தைராஜன் (வேப்பூர்), வட்டாரக் கல்வி அலுவலர்கள் இளங்கோவன் (பெரம்பலூர்), ஜோதிலட்சுமி (வேப்பந்தட்டை), சாந்தப்பன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**